ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 21—5—44 | இதழ் 11.

## குடந்தை திராவிட மாணவர் மாநாடு.

தோழர் வ. இரா. நெடுஞ்செழியன் ஆற்றிய தலைமை உரை.

*குடந்தையில் 19-2-44ல் நடைபெற்ற திராவிட மாணவர் மாநாட்டின் நான்காம் பகுதிக்குத் தலைமை வகித்த தோழர் நெடுஞ்செழியன் அவர்களின் சொற்பொழிவு கீழே தரப்படுகிறது.*

அறிவுசான்ற பெரியோர்களே! மதிப்பிற்குரிய தோழியர்களே! அன்புகெழுமிய தோழர்களே!

ஈண்டு குழுமியிருக்கும் உங்கள் அனைவர்க்கும் முதற்கண் எனது மனமார்ந்த வணக்கமும் மகிழ்ச்சியும் உரியவாக. மாநாட்டின் தலைமைப்பதவி எதிர்பாராத முறையில் எனக்குக்கொடுக்கப்பட்டது பெரிதும் வியப்பாகவே இருக்கிறது. மாணவர்மாநாட்டில்மாணவத்தோழரொருவர் தலைமை தாங்கவேண்டும் என்று கருதிய காரணத்தினாலோ அல்லது நான்காவது பகுதிக்கும் தலைமைதாங்க ஒரு தாடிதேவை என்று எண்ணிய எண்ணத்தினாலோ எனக்குத் தலைமைப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறெந்த வகையிலும் இந்தமாநாடு முன்னேற்றமடைந்திருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருவகையில்மட்டும் முன்னேற்றமடைந்திருப்பதாகத் தெளிவாக அறிகின்றேன். அதுதான் தாடியில் முதற்பகுதிக்குத்தலைமைவகித்த தோழர் முத்தையா அவர்களுக்கு தாடி இல்லை—இரண்டாவது பகுதிக்குத்தலைமைவகித்த தோழர் கலிபுல்லா அவர்களுக்கு ஓரளவுவளர்ந்ததாடி—மூன்றாவது பகுதிக்குத்தலைமைவகித்ததோழர் பா. தாவுத்ஷா அவர்களுக்கு அதைவிடச் சிறிதளவு நீண்டதாடி—நான்காவது பகுதிக்குத் தலைமைவகிக்கும் எனக்குஅதையும்விட சிறிதளவு நீண்டதாடி. எனவே தாடியின்வளர்ச்சி ஆண்மையின் வளர்ச்சிக்கு அறிகுறி என்னலாம். ஆண்சிங்கத்திற்குப் பிடரிமயிரும், ஆண்யானைக்குக் கொம்புகளும், ஆண்மயிலுக்குத்தோகையும் ஆண்கோழிக்குத்தாடையும் இருந்து ஆண்மையைப் புலப்படுத்துமாறு போல ஆடவரின்ஆண்மையைப்புலப்படுத்துவது தாடியாகும். செயலாற்றுக்கு ஆண்மை தேவை என்பதைப் புலப்படுத்துகின்ற முறையில் என்தாடியும் விளங்குகின்றது என்பதை ஐயுற்றுஅறிய விரும்புந்தோழர்களுக்கு அறிவிக்கவிரும்புகிறேன். ஆகவே உளம், உரை, உடல், ஆகியவைகளிலே ஆண்மை வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது இந்தமாநாட்டின் தாடி வளர்ச்சி. நிற்க,வரலாற்று ஏட்டிலேஇடம் பெறத்தக்க முதல்திராவிட மாநாட்டிலே முதன்முறையாகத் தலைமையேற்கும் பேறு பெற்றதற்குப் பெரிதும் மகிழ்கிறேன். உள்ளபடியே மாநாட்டில் தலைமை வகிக்கப்போதிய அறிவும், ஆற்றலும்எனக்குண்டு என்பதிலே உறுதியும், தேவையுள்ளபோது தோழர்களின் தோள்களை உதவியாகப் பெறமுடியும் என்பதிலேஉரிமையும்எனக்கிருப்பதால்தலைமைதாங்கப் பின்வாங்கினேனில்லை. அறிவும், ஆராய்ச்சியும், தெளிவும், திட்பமும் கொண்ட பலசொற்பொழிவுகளை இரண்டு நாட்களாகக்கேட்டுவருகிறீர்கள். கிரீக்கிய நாட்டில் தோன்றிய டெமாஸ்தெனிஸ் போலவும், இத்தாலிய நாட்டில் தோன்றிய சிசரோ போலவும், ஆங்கில நாட்டில் தோன்றிய பர்க்போலவும், அமெரிக்கா நாட்டில் தோன்றிய இங்கர்சால்போலவும் சிறந்தசொற்பொழிவாளருக்கு வேண்டிய பண்புகளெல்லாம் ஒருங்கெய்தப்பெற்ற தலைவர்களின் அரிய சொற்பொழிவையுங்கேட்டு அகமகிழ்ந்தீர்கள். இந்தத்திராவிட மாணவ மாநாட்டை என் கூட்டியுள்ளோம் என்றால் வருங்கால உலகத்திற்கு அடிப்படை இன்றைய மாணவ உலகமாகும் என்று உணருவதால். வருங்காலத்தில் அறிவியல் அரசியல், பொருளியல், வாழ்க்கையியல் ஆகியவற்றை நடாத்திச்செல்லவேண்டிய பொறுப்பு மாணவர்கள் கையிலே உள்ளது. எனவே தமிழ்நாட்டைப்பொறுத்தவரையில் உண்மைநிலையை மாணவர்கள் உணரும்படி செய்யவேண்டியது மிக மிக இன்றியமையாததாகும். நாம் என்இன்று திராவிட நாடென்று பிரித்துப்பேசுகின்றோம் என்றால்இந்தியாவின் மற்றப்பகுதிகளோடு ஒட்டிவாழக்கூடாது என்ற கருத்தால் அல்ல, அவற்றோடு ஒட்டிவாழ முடியவில்லை என்ற காரணத்தினால். உலகத்தில் தட்பவெப்ப நிலைக்கேற்பவும், சுற்றுச்சார்பிலுள்ள இயற்கைப் பொருள்களுக்கேற்பவும் மக்கள் வாழ்க்கை வேறுபடுகிறது. வாழ்க்கைமுறை வேறுபடவே பண்பு, பழக்கவழக்கம், நாகரிகம், மொழி கலை ஆகியவற்றிலும் வேறுபாடு நிகழப்பெறும். வேறுபட்ட நாகரிகமும், பண்பும், பழக்க வழக்கமும் கொண்ட மக்கள் ஒன்றிய வாழ்க்கை நடாத்தமுடியாது. இது உலகங்கண்டறிந்த வரலாற்று உண்மை. உலகில் பல்வேறு நாடுகள் தனித்தனிபிரிந்து விளங்குதற்கு எவ்வளவு அடிப்படையான காரணங்கள் உண்டோ அவற்றைவிட மிகவான அடிப்படைக்காரணங்கள் உண்டு திராவிட நாடு தனியாக இலங்கவேண்டுமென்பதற்கு. அதற்குவேண்டிய சான்றுகளை இலக்கியத்தினின்றும் காட்டமுடியும்; உண்மைகளை வரலாற்றினின்றும் நிறுவமுடியும்; பண்புகளை நிலநூலினின்றும் பகரமுடியும். இந்த நாட்டில் வாழ்தற்குரியர் திராவிடர் என்பது திராவிட நாகரிகம் இந்த நாட்டில் இருந்து வந்ததுஎன்ற காரணத்தினால் மட்டுமல்ல, இந்நாட்டிற்கு ஏற்றது திராவிட நாகரிகம் என்றுகருதுகின்ற காரணத்தினால்.

தோழர் அண்ணாத்துரை அவர்கள் ஆணித்தரமாக அறைந்தது போலத்திராவிடரும் ஆரியரும்எவ்வளவுதான் முயன்றபோதிலும் ஒன்றாகவாழ முடியாது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்ததுபோதும். ஏற்பட்டபலனைநாமறிவோம். இன்று உலகிலுள்ள பல்வேறு நாடுகளும் தம்முடைய இனம், கலை, நாகரிகம் ஆகியவை வாழ, வளர,வகைபெறப் பாடுபட்டு வருகின்றன. கிழக்குத்திசையிலே விமானங்கள் வட்டமிடும் நிலையும், மேற்குத்திசையிலே மாடமாளிகைகளை மண்மேடாக்கிக் கூடகோபுரங்களைக் குட்டிச்சுவராக்கும் குண்டுகளின் குடைச்சலொலியும், வடக்குத்திசையிலே பாங்குடன் அமைக்கப்பட்டிருக்கும் பாசறையிலிருந்தெழும் படைக்கல வோசையும், தெற்குக்கடல்களிலே நீரில் அமிழ்த்தியொழிக்கப்படும் நாவாய்களினின்றும் எழும்பும் நீர்க்குமிழிகளின் தோற்றமும் ஏற்பட வேண்டிய காரணம் என்ன? வீரர்கள்

2-ம் பக்கம் பார்க்க.

## குடந்தைதிராவிட மாணவர் மாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெங்களத்திலே செங்குருதி சிந்திடவும், காடுமேடுகளைத்திருத்திப் பாதைகள் பல புதுக்கிக்கடும்வெயிலில் காளைகள் கலங்கவும், விமானங்களிலே வீறுடன் செல்லும் வீராங்கனைகள் வழியிலே வாழ்வின் முடிவைக்காணவும், கட்டிளஞ் செம்மல்கள் போற்றிக்காத்திடும் தம் உயிர்களை நாட்டின் நன்மைக்கென்றுநல்கிடவுமான நிலைமைகள் ஏற்படக்காரணம் என்ன? அரசியல், அறிவியல், வாழ்க்கையியல் ஆயவற்றிலே உரிமை நடைப்படுத்தப்படும் நிலையிலே ஒவ்வொருநாடும் தற்காப்புக்கோலி முன்னேற்ற வழியில் முனைந்து செல்லவேண்டியிருப்பதனாலன்றோ! இந்த நாட்டின் நிலைமைஎன்ன? இந்த நாட்டில் அரசியல் தலைவர்கள் என்போரில்பலர் போலந்து பொலிவிழந்ததற்குப் பொங்கி எழுவார்கள்-டென்மார்க் நன்மார்க்கத்தினின்றும் துன்மார்க்கத்திலிறங்கியதென்று சன்மார்க்கம் பேசுவார்கள்—ஆஸ்திரியாவின் அவதிநிலை கண்டு அலறுவார்கள்-இத்தாலியின் இழிநிலைக்கு இரங்குவார்கள், ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்குமேல் பல்வேறு துறைகளிலும் சிதைத்துச் சீரழிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அடிமைப் படுத்தப்பட்டிருக்கும் தமிழகத்தின் நிலைமையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டால் அவர்கள் ஓரச்செவியராகுகிறார்கள். ஆகவே நம்நாட்டில் மக்கள் தம்நிலையை நன்குணரும்படி செய்யவேண்டியது இன்றியமையாததாக விருக்கின்றது. அதுவும் மாணவர்கள் உணரும்படிசெய்யவேண்டியது அதனினும் இன்றியமையாததாகும். அதற்கு இத்தகைய மாநாடுகள் தேவை. எனவே தான் இத்திராவிட மாணவ மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. இன்னும்மூன்று சொற்பொழிவுகள் உள்ளன. அவற்றையும் நீங்கள் கேட்டபிறகு இறுதியில் காலம்இடங்கொடுப்பின் உங்களைப் "பாசறைக்கு" அழைத்துச் சென்று "பாசறையில்" நிலைமையை விளக்கவிரும்புகிறேன். ஆதலால்நான் "பாசறைக்குக்" கூப்பிடும்போது வந்துசேருங்கள் என்று கூறிய அளவானே என்னுடைய முன்னுரையை முடிக்கிறேன்.

### முடிவுரை.

பெரியோர்களே! தோழ தோழியர்களே!

நான் முதலில் கூறியபடி உங்களைப் "பாசறையில்" இறுதிப் "பாசறையில்" நிலைமையை விளக்குதற்குப்போதிய காலமில்லாததினால் அதனைப் பிறிதொரு வாய்ப்பிலே செய்கிறேனென்று கூறிமுடிவுரையென்ற அளவிலே சில சொல்லமட்டும் விழைகிறேன். இதுகாறும் தலைவர்களும் சொற்பொழிவாளர்களுமாகச் செய்த பதினேழு சொற்பொழிவுகளைக் கேட்டீர்கள். திராவிட நாகரிகம் என்ன என்பதைப்பற்றியும், திராவிட இனம் ஏன் தனித்துவாழவேண்டும் என்பதைப் பற்றியும், திராவிடர் ஏன் ஆரியரோடு சேர்ந்து வாழ்தற்கில்லை என்பதைப்பற்றியும், வாழ்ந்த திராவிடம் வாடியதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றியும் தெள்ளத்தெளிய விளக்கினார்கள்.

சிறுசிறு நாடுகளாக விளங்கும் பெல்ஜியம், ஹாலண்டு, போலந்து, ஆஸ்திரியா, போர்ச்சுகல், அயர்லாந்து, இங்கிலாந்துபோன்ற நாடுகள் தனித்து வாழக்கூடுமானால் ஏன் திராவிடநாடு தனிநாடாக விளங்குதல்கூடாது? தனிநாடாகப் பிரிந்தால்வரும் இடையூறு என்ன? தனிநாடாகப் பிரிந்தால் எந்த விதத்தில் தாழ்ந்துவிடும்? திராவிடநாடு தனித்து வாழ்வதற்கு என்ன வசதிகள் இல்லை? திராவிடநாட்டில் நீர்வளம் நிலவளம் உண்டு. உயர்ந்த மலைகள் உண்டு. கண்டுகளித்தற்குரிய செறிந்த இயற்கை வளப்பங்கள் உண்டு. கனிகள்வெட்டியெடுக்கச் சுரங்கங்கள் உண்டு. கதிர்களை விளைத்திடக் கழனிகள் உண்டு. விளைவுகள் விஞ்சித்தோன்றுஞ் சோலைகள் உண்டு; முத்துக்கள் குளித்தெடுப்பதற்கு ஏற்ற முறைகள் உண்டு. கடலைப் பிளந்துசெல்லும் கப்பல்கள் தங்குதற்குரிய துறைமுகங்கள் உண்டு. தற்காப்புப் படைக்குவேண்டிய வீரர்களும் வீராங்கனைகளும் உண்டு. அறிவியற்றுறையில் 'கைபோய அறிஞர்கள் உண்டு. இவை போதாதா நாடு தனித்திலங்குதற்கு என்று கேட்கிறேன். நாடு பிரிந்தால் ஏற்படும் நிலைமை என்ன. இன்றைக்கு ஒவ்வொரு துறையிலும் மக்களை ஏமாற்றி, உண்டு, ஊதி, உப்பிவரும் பார்ப்பனராய ஆரியக்கூட்டம் ஒருமிக்க உரிமைகொள்ளமுடியாது; வடநாட்டாரின் வாணிபப் படையெடுப்பு விந்தியத்தோடு நின்றுவிடும்; வடநாட்டிலேயே தங்கும் மற்றவரால் நடத்தப்படும் பாங்குகளெல்லாம் மூடப்பட்டுத் திராவிட மக்களின் பொருட்குவியலைக்கொண்ட பாங்கிகள் நிறுவப்பெறும்; கடல்கடந்து சென்று கண்ணீர் வடிக்கும் நம்மக்களைக் கொண்டுவர வழியேற்படும்; அரசியலைத் தாய்மொழியில்நடத்த வசதியேற்படும். நாட்டுப் பிரிவினையை மறுத்துப் பேசுவோர் திராவிட நாட்டைப் பிரித்தால் இன்ன துன்பம் நமக்கு ஏற்படும் என்று ஒருவராவது தெளிவாக இதுகாறும்கூறினாரில்லை. டெல்லியிலே வேவல்பிரபுவும்தில்லையிலே தீக்ஷதரும் கூறுவர் இந்தியாஒரே நாடென்று. ஆங்கில ஆட்சிக்குள் இத்துணைக் கண்டம் வருவதற்குமுன் என்றாவது ஒரேநாடாகக் கருதப்பட்டுவந்ததா என்றால் இல்லை என்று வரலாறு கூறும். தமிழகத்தைத் தனியேதான் நாடு என்று பிரித்துப்பேசி வந்திருக்கிறார்கள் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் தரமுடியும். வரலாற்று ஏட்டுச் சுவடியைப் புரட்டினால் இந்தியா துண்டு துண்டாக ஆட்சி செலுத்தப்பட்டு வந்திருப்பது விளங்கும். ஆணைவிரிந்தும், குறைந்தும் காணப்பட்டபோதிலும் ஆட்சிமுறை ஒன்றாகக் காணப்படவில்லை. இன்றைக்கும் சந்திர நாகூர், காரைக்கால், புதுச்சேரி, ஏனாம்முதலிய இடங்களில் பிரெஞ்சு ஆட்சிதான் நடைபெறுகிறது. கடலூரிலே ஆங்கிலஆட்சி அதற்கடுத்த புதுச்சேரியிலே பிரெஞ்சு ஆட்சி. கோவா, டையு டாமன் ஆகிய இடங்களும் இன்னும் போர்த்துக்கீசிய ஆட்சியில்தான் இருந்துவருகின்றன. பலவாகக் காணப்படும் சமஸ்தானங்களில் வேறுபட்ட ஆட்சிமுறைகள். இவைகளெல்லாம் பிரிந்து நிற்கும் நிலையை உணர்த்தவில்லையா என்று கேட்கிறேன். இப்படியிருக்கத் திராவிட நாட்டைப் பிரித்தால் எந்த விதத்தில் இன்றைய நிலையினின்றும் அது தாழ்ந்துகாணப்படும்? ஆகவே எவ்வளவுதான் பொருந்தாக்காரணங்கள் கூறப்பட்டபோதிலும் திராவிட நாடு பிரிந்துதான் ஆகவேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு நாம் வந்துவிட்டோம்.

இனித், திராவிடநாட்டிலே தமிழாட்சி, தனியாட்சியாக விளங்கும் ருஷ்யாவிலுள்ள முறையைப்போல, நம் நிலையைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். வேந்தர்களின் வழிவந்தோர் இன்று வீதியில் உலாவவும், இமயம் சென்று முட்டியும், கடாரத்தின் கடற்கரையை மோதியும், மலேயாவை மண்டியிடச்செய்தும் விளங்கிய வீரம் இன்று பஞ்சாங்கத்திற்கு நடுங்கவும், அன்று ஏந்தியவாள் இன்று காய்ந்த தர்ப்பைச்குத் தலைவணங்கவும், மாடமாளிகை கூடகோபுரங்களில் வாழ்ந்தோர் இன்று குச்சி வீடுகளிலும் கூரை வீடுகளிலும் வாழவும் ஆயநிலைமை ஏன் என்று சிந்தித்துப்பாருங்கள். ஆரியர் கடவுட்கற்பனையும், சமயக் கொள்கைகளும் மக்கள் மனதிலே குடிபுகுந்த பிறகுதான் நிலைமை மாறத்தொடங்கிற்று. மேலுலகம் பேசப்படவே இவ்வுலக வாழ்வைப் பற்றிய சிந்தனை நின்றது; கற்பனைக் கடவுள் பேசப்படவே மக்களின் முற்போக்கு முயற்சிக்கு முட்டுக்கட்டையிடப்பட்டது; கடவுளரின் ஆற்றல் புகழப்படவே மக்களின் ஆற்றல் மழுங்கச் செய்யப்பட்டது. ஊன் உண்ணாமை வற்புறுத்தப்படவே உடலுறுதியும் அதற்கேற்ப உளஉறுதியும் தொலைந்தன. இறுதியாக என்னருமைத் தோழர்களே! கடமையைச் செய்யும்போது கலக்கம்கூடாது. கடவுட்கற்பனையும், சமயக் கொள்கைகளும் மனதிலே குடிகொண்டிருக்கும் வரையில் கலக்கம் நீங்காது, மடைமை மிகும். கடமையைச்செய்த பெரியோர் பலர் தம் தசைகளைப் பரப்பிக்குருதியால் மெழுகிஅமைத்துத் தந்திருக்கும் பகுத்தறிவுப் பாதையில் நீங்கள் செல்லவேண்டும். தூக்குமரம் முத்தமிட அழைக்கும்; கூரிய வெள்ளிய வாள் தலைவணக்கத்தைப்பெற விரும்பும், துப்பாக்கிமுனை உங்கள் மார்பின் ஆழத்தைஅளக்க அவாக்கொள்ளும்; பீரங்கிகள் உங்கள் மெய்யைத்தழுவ விழையும். அவற்றிற்கு மாற்றம்உரைக்க மனத்திண்மை பெற

(3-பக்கம் பார்க்க.)

# புராணிகருக்கு!

குடந்தையில் சென்ற கிழமை சீமந்தனி என்ற புராணப்பிரசங்கம் செய்யவந்த திரு. கிருபானந்த வாரியாருக்குக் குடந்தைத்தமிழ் மக்கள் விடுத்த கேள்வித்தாள், இங்கு வெளியிடப்பட்டிருக்கிறது. அவர்பதில்கூறவில்லையாம். இதைக்கண்ணுறும் வேறு புராணப் பிரசங்கிகள் யாரேனுமாவது பதில்கூறுவரா?

திருவாளர் கிருபானந்தவாரியார் அவர்களே! அடியிற்கண்ட வினாக்களுக்கு விளக்கமாக விடையளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

1. தமிழுக்காகத் தொண்டுபுரிவதாகச்சொல்லும் தாங்கள் சொற்பொழிவு செய்யும்போது இடையிடையில் "ஹர ஹர நமப் பார்வதீ பதே" என்று பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் முன்னிலையில் சொல்லுகிறீர்களே, அது தமிழ்தானா? அதன் கருத்து என்ன?

2. தாங்கள் உடல்முழுவதும் பலவிதமான அணிகளை அணிந்திருக்கிறீர்களே, அது சிவனடியாராகிய தங்களுக்கு எதற்காக?

3. தாங்கள் அணிந்திருக்கும் உருத்திராட்சத்தைப்பற்றி நால்வர்களால் பாடப்பட்ட தேவார, திருவாசகங்களில் கூறப்பட்டிருக்கிறதா? அதை மெய்ப்படுத்துவீர்களா?

4. இப்போது நமது நாட்டிலுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் ஆண்டவனாகிய ஏசுநாதருக்கு ஆலயங்களைக்கட்டி, அவற்றின் ஆதரவில் கல்விக்கழகங்கள், நோயாளி விடுதிகள், திக்கற்றமாணவர் இல்லங்கள் ஆகியவைகளை ஏற்படுத்தி மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் முயற்சிசெய்கிறார்கள். ஆனால் நமது தமிழ் நாட்டுக் கோவில்களின் வருவாய் மக்களின் அறிவு வளர்ச்சிக்கே காணாதபோது, தாங்கள் தமதுபொருத்தமற்ற சொல்வன்மையால் பாமர மக்களின் பொருளைத்திரட்டி வடலூரில் ஆலயம் கட்டப்போகிறேன் என்று சொல்லுகின்றீர்கள். இதற்குமுன் தமிழ் வேந்தர்கள் கட்டிய ஆலயங்கள் எவ்வளவு! அக்கோவில்களின் ஆண்டு வருமானம் ஒன்பதுகோடி என இந்து சமய அறநிலையத்தார் அறுதியிடுகின்றனரே, அந்தப்பொருள் இந்நாட்டுப் பழங்குடி மக்களாகிய நமக்குப்பயன்படுகிறதா? அங்ஙனமிருக்கத் தாங்கள் ஏன் ஆலயம் கட்டுகிறீர்கள்? ஆரியத்துக்கு ஆக்கந்தருவதும், பழங்குடி மக்களைப் பிறமதத்தில் தள்ளுவதுந்தானா தங்கள் பெருந்தொண்டு?

5. தமிழகத்தின்கண் உள்ள சைவ, வைணவக் கோவில்களெல்லாம் இன்றுவரையில் சிறப்புடனும், ஆதரவுடனும் இருப்பதற்கு நால்வர்களும், ஆழ்வார்களும் பாடிய தமிழ்ப் பாடல்கள்தானே காரணம்? வடமொழியில் யாராவது பாடிச் சிறப்பித்ததாகத் தாங்கள் கூற முடியுமா?

6. முடியாதெனில் தங்களைப்போன்ற பெரியார்கள் ஒரு மாநாடுகூட்டித் தமிழ் நாட்டுக் கோவில்களில் தமிழில்தான் வழிபாடு நடத்த வேண்டும் என்று (இந்து சமய அறநிலையத்தார் மூலமாகவாவது) கேட்கக்கூடாதா? அதன்படி நடவாவிடின் தாங்கள் வகுக்கும் பிற திட்டங்களில் நாங்களும் கலந்துகொண்டு ஆக்கந்தருகிறோம். இதைப்பற்றித் தங்கள் கருத்தென்ன? தமிழகத்திலுள்ள கடவுளர்களுக்குத் தமிழ் மொழி புரியாதா? புரியாவிட்டால் அவர்கள் இங்கிருப்பது நீதியா?

7. இலிங்க புராணத்தில் கூறப்படும் இலிங்க உற்பத்தி தமிழருக்கு உகந்ததா? முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தாருகா வனத்து ரிஷிபத்தினிகளை நெறியல்லா நெறியில் மருவப்போக, அம் மங்கையரின் மனவேதனையால் மகாதேவனது இலிங்கம் (மானி) அறுந்து விழுந்திடுமாறு சாபம் பெற்றதாக இலிங்கபுராணம் கூறுகின்றவரலாறு இந்நாட்டிற்கு ஏற்றதா?

8. திருவிளையாடற் புராணத்தில், தாயைப் புணர்ந்து தகப்பனைக்கொன்ற பிராமணரின் பாதகத்தைத் தீர்த்தது, பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிப் பழைய மந்திரிமாரின் மனைவிகளைப் பெண்டாக்கியது, சிவபெருமான் வலை

(5ம் பக்கம் பார்க்க)

# கதிரேசருக்குக் காக்கை விடுத்தூது!

(புதலை. மு. இராமநாதன்)

**ஆசிரியப்பா.**

காக்காய்! காக்காய்!! கார்நிறக் காக்காய்!!
ஆம்பல் வண்ண அலகுடைக் காக்காய்!
முக்குணம் பொருந்திய மிக்குணக் காக்காய்!
தென்றிசைக் குமரித் தெளிநீ ராடிநீ
சென்னை நோக்கிச் செல்வா யாயின்,
செல்லும் வழியில் தில்லையிற் றங்கி
அண்ணா மலையார் அமைத்து இருக்கும்
பலகலைக் கழகத் தலைமதி லிருக்கும்
பண்டித மணியெனும் பட்டம் பெற்றவர்
ஆரியப் புழுக்களின் அடிகளைப் பணிந்து
காலங் கடத்தும் கதிரேச னெனும்
பெயருடை யவரைப் பீடாய்க் கண்டு;
"உண்மை யன்றி இன்மைப் புகலான்,
உண்மைத் திராவிடன் உன்றன் இனத்தான்
பிறவியில். ஆனால் பித்த னல்ல
உன்றனைப் போலவன்" என்றுரை செய்தபின்
வடமொழித் தென்மொழி வகையாய்க் கற்றீர்,
ஆயினும் உமக்குநல் லறிவு இன்றி
இமியும் திராவிட இனத்தவ ரின்பால்
இதமது சிறிதும் இல்லா மல்நீர்
பார்ப்பனர் தமக்குப் பட்டியா யிருந்து
பலதுறைத் தமிழரைப் பழித்துப் பேசுசீர்.
சைவம் என்னும் சாத்திரக் குட்டையில்
அமிழ்ந்து நீவிர் அறிவிழந் துழல்வதை
அறிந்து மனமிக அலமரு கின்றான்.
இந்த நாட்டின் இளந்திரா விடர்கள்
உமது குற்றம் ஓர்ந்துள ரெனினும்
மன்னித் தும்மிடம் வாஞ்சைக் காட்ட
தயாரா யுள்ளார் சஞ்சலம் வேண்டாம்
ஆதலால் இனிநீர் ஆர்யரை விடுத்து
வருவீர் இங்கு; வந்து ஈ. வெ. ராவிடம்
பகுத்தறி வென்னும் பாடம் கேட்டுத்
தூயத மிழர்க்குத் தொண்டு செய்ய
வருவீர். இலையேல் வெள்வால் போல
சொல்ல வொண்ணாத் தொல்லைக ளடைவீர்
என்று நானவர்க் கியம்பின தாக
எடுத்து உரைத்து முடித்த பின்
உனக்கு உகந்த வூர்செல் வாயே.

# திராவிட நாடு

காஞ்சி 21—5—44 ஞாயிறு

## மகாகனத்தின் மணியோசை!

"அரசியல் ஞானி, அறிவுக்களஞ்சியம், ஆங்கிலமொழியிலே அளவற்ற ஆற்றலுடையார், பாரெங்கும் சுற்றிப்பாங்கியருங்கேட்டு வெட்கும்படிப் பிரசங்கமாரி பொழிந்தவர், பாட்டுமொழியிலே நாட்டு நிலையைக், கேட்டிடுவோரின் மனதிலே ஊடுருவிச் செல்லும்படிப் பேச வல்ல பேராற்றல் கொண்டவர், மகாகனம் எனும் மாண்புடைப்பட்டம்பெற்று, ஏககாலத்திலே வைசிராய்க்கும் தோழராய் மகாத்துமாவுக்கும் நண்பராய் இருக்கும் நிலையிலே உள்ளவர், எமது மயிலைவாசி, மகாகனம்வலங்கைமான் சீனுவாச சாஸ்திரியார்," என்று விளம்பரவிருதுபெற்று, விருத்தாப்ய பருவத்தை அடைந்து, நறைத்து, உடல் இளைத்து, நாட்டுநிலைகண்டு சலித்துப் போயிருக்கிறார், சாஸ்திரியார். அவர், சென்னையிலே ஓரிடத்திலே, இராமாயணக்காலட்சேபம் செய்து வருவதாகப் பத்திரிகைச்செய்தியொன்றுகண்டோம், பரிதாபம் கொண்டோம். இலண்டனிலும் பாரிசிலும் வட்டமேஜை மாநாட்டிலும் சர்வதேசச்சங்கத்தினர் முன்னிலையிலும், பேசியமகாகனம், மன்னர் பிரான் சர்க்காருக்கும் மதியும் நீதியும் உணர்த்துவிக்கும் உரைபல பேசுவோர் என்று பெருமையாகக் கூறப்பட்டுவந்த மகாகனம், லிபரல்கட்சி எனும், நிபுணர்களின் நிலயத்தின் நடுநாயகம் எனத்திகழ்ந்தவர், சிந்தனை எனினும் அவருடையநேர்த்தியான வாசகத்தைக் கேட்பதிலே எமக்கோர் இன்பம்உண்டு என்று எதிரிகளும் கூறிடும் நிலையில் நின்றவர், இன்று, இராமாயணக்காலட்சேபம் செய்கிறாராம்! இராமாயணம் இனிநாட்டிலே இடம்பெற வேண்டுமானால் மகாகனங்கள் கூட, அதன்பக்கம் நிற்கவேண்டும்,அவ்வளவு பெரிய எதிர்ப்பு இதுபோது அப்புராணத்திற்கு ஏற்பட்டு விட்டது என்பதை இச்சம்பவம் காட்டுகிறதோ, அல்லது, மகாகனம் சாஸ்திரியார், மற்றத் துறைகளிலே மாரடித்தழுது தோற்றுப் போனதால், வியர்த்து விம்மி, விலா நோகவேறுவேலை செய்வதைவிட, "ராமநாமமே கற்கண்டு" என்றபஜனை மனப்பான்மை பெற்றுவிட்டார் என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறதோ நாமறியோம், ஆயினும் ஒன்று அறிவோம், இது பரிதாபத்துக்குரிய காட்சி! பாழடைந்த மாளிகை, பட்டுப்போன மரம், வறண்ட ஆறு, ஒடிந்தவாள், என்பவை போலவன்றோ இருக்கிறது, இராமாயணப் பிரசங்கம் செய்கிறார் மகாகனம் [illegible] கேட்கும் போது!

அந்தக் குலுக்குநடையும் மினுக்குமேனியும், தளுக்குமொழியும் பளிங்குப் பற்களும், கண்ணாடிக்கன்னமும், தென்னம்பாளை பிளந்ததன்ன சிரிப்பும், பொன்மேனியும், பூ இதழும், துடியிடையும் தாமரைக்கண்ணும் எங்கே! நரைத்து நடுக்கலுடன், நாற்றமடிக்கும் புண்ணுடன் நடுவீதியிலே தள்ளாடிநடந்து தகரக் குவளையைக்காட்டித் தரித்திரச்சுருதியைமீட்டித், தனவான்களை வேட்டையாடும் இந்த நிலைஎங்கே, எவ்வளவு வீழ்ச்சி, எத்தகைய தாழ்ந்தநிலை, கோபுர உச்சியிலே கூத்தாடினாள்குட்டிச்சுவரிலே நடக்கிறாளே, கீதம்பாடி மகிழ்வித்தாள், இன்றோ ஓலமிட்டு விரட்டுகிறாளே, கண்டவர் மயங்கினரே இன்று எதிர்ப்பட்டோர் ஏசுகின்றனரே, பாவம், ஏன் இவளுக்கு இந்நிலைஏற்பட்டது என்று எவரும், அந்நாளிலே அழகியாகஇருந்து ஆடவரை அணைத்து அழித்து, பணம் பாராக்குக்கூற, களிப்புகாவலிருக்க, முகஸ்துதி சாமரம்வீச, மது, மதியூக மந்திரியாகஇருக்க, ஆடம்பரம், அடைப்பந்தாங்க, சீமான்கள் கை கால்பிடிக்க, சிற்றரசர்கள்ஏவலராகநிற்க,சிற்றின்பபுரியிலே ஆட்சிசெய்துவந்து, பின்னர் சீரழிந்து சிரிப்பழிந்து, மேனியின்கட்டுஅழிந்து கண்ணின் ஒளிஇழந்து, நோய்கைபிடித்திழுக்க, இருமல்மிரட்ட, இடுப்புவலி இம்சைசெய்ய, வறுமைவாட்ட, வழியிலேசெல்வோரிடம், பிச்சைகேட்கும் நிலையைப்பெற்றவளை, ஏன்இந்நிலைபெற்றாய், எங்கே உன் இளமையும் அழகும், சிங்காரமும் சிரிப்பும், மாளிகையும் மதுவும், காதலரும் கவர்ச்சியும், என்று எவரும் கேட்பதில்லை, மனதிலே எண்ணிக் கொள்வர், அன்று அவள்கொண்ட மமதை எவ்வளவு இன்று அடைந்துள்ள வேதனைக்கு அதுதான் வித்துபோலும் என்று கருதுவர். அதுபோலவே, மகாகனம் அரசியலிலேஉலவித்தமிழரின் எண்ணப்பூங்காவைஅழித்ததையும், நீதிக்கட்சியின் கோட்டையைத் தகர்த்ததையும், தமிழர் தலைவர்கள்மீது சொல்லம்பு வீசியதையும் அதேசமயத்திலே காங்கிரஸ் ஆரியருக்குக் காந்தியார் நிருவிய சுகாஸ்ரமம் என்பதைஅறிந்து அதற்கு "ஸ்துதி" பாடியதையும், அறிந்தவர்களுக்கு, இன்று சாஸ்திரியார், இராமாயணம்படிக்கவேண்டியநிலைக்கு வந்தது காணும்போது ஏதேதோ மனதிலே எழுவது இயற்கைதான்! என்றாலும் நாம், பருவத்தைஎண்ணி அவருடைய இந்தக்கால கருமத்தைக் கேலிசெய்ய மறுக்கிறோம். ஏதோபாவம், வாழ்ந்தார், அந்தக் காலத்திலே அற்புதமான மனக்கோட்டைகள் கட்டியிருப்பார், இன்று காண்கிறார், பெரியதோர் புரட்சிவேகம் பூசுரரின் வாழ்வைக் கீழேபுரட்டித்தள்ளித் தலைகீழ்நிலை உண்டாக்கக்கிளம்பி இருப்பதை! சோகம் பிறப்பதும் சலிப்பு முற்றுவதும் இயற்கைதானே இந்நிலையிலே. என்வேதான்போலும், அவர் இராமாயணக் காலட்சேபம் செய்யப்புறப்பட்டுள்ளார். மகாகனத்தின் துணைகொண்டு இராமாயணம் மக்களிடை நிலைத்துவிடும், என்று பூசுரக்கூட்டம் மனப்பால் குடிக்கும் என்பதை நாமறிவோம். இந்தச் சம்பவம், பாராளும் மன்றங்களிலே வீற்றிருந்த மகாகனம் பஜனைக் கூடத்திற்குக் காலவேகத்தால் அனுப்பப்பட்டார் என்பதைக்காட்ட உதவுமேயொழிய, இராமகாதைக்குஆணை அமையாது. நாடுநாடுவது. [illegible] நச்சுக்கோட்பாடுகள் நிறைந்த இதிகாசாதிகளையல்ல!! அந்தக்காலம் மலையேறி விட்டது. மகாகனங்களால், அந்தநிலையை மாற்றிவிட முடியாது. மற்றவற்றிலே பெற்றதோல்வியின் அறிகுறியே, மகாகனத்தின் இராமாயணபாராயணம்என்று கருதுகிறது தமிழர் சமுதாயம். மகாகனத்தின் நிலைஇப்படியும் ஆகவேண்டுமா பரிதாபம், என்றுபச்சாதாபப்படுகிறது!! பல்விழுந்து, நகமிழ்ந்து, பாயும் வலிவிழந்தபுலி, பசியைமட்டும் இழக்கமுடியவில்லை. எனவே பொன்காப்பைக்காட்டி வழிப்போக்கனை எய்த்து,அருகேஅழைத்துஅவனைக்கொல்லமுயன்றதாகஒருகதை உண்டே,அதனையும்நீறுபூசி மணிஅடித்து ஏடுகையிலே பிடித்துச் சைவத்தின் மேன்மையைக் கடைப்பிடித்தேன், இனி ஒருஉயிரையும் கொல்லேன் என்று கூறி, ஏமாந்து அருகேவந்த எலிகளைத்தின்ற, உருத்ராட்சப் பூனையின்கதையையும் பள்ளிச்சிறாரும் அறிவர். பள்ளிச்சிறார் பெற்றுள்ள அளவுகூடவா, இன்றையத் தமிழரின் பொது அறிவு இல்லை? அவர்கள் தெரிந்து கொள்ளமாட்டார்களா, மகாகனம் சாஸ்திரியார், அரசியல் ரணகளத்திலே நின்று போரிட்டு அலுத்தார், இன்று புராணப்பொறி அமைத்து, அதிலேதமிழரைச் சிக்கவைக்க முயலுகிறார் என்ற விஷயத்தை! ஏனோ, பாபம், தள்ளாதபருவத்திலே இந்தப்பயனளிக்க முடியாத காரியத்திலே ஈடுபடுகிறார், பரிதாபத்துக்குரிய மகாகனம்!! பஜனைக்கூடத்திலே அமர்ந்து, பக்தகோடிகளைக் கண்டு மகிழ்ந்து, ஏடுபடிப்போனிடம் பேசிவிட்டு, "எம்பிரானைத்" தொழுதிட, ஜப்பான் சூடத்தைக்கொளுத்தி, ஜெர்மன் ஓவியக்காரன் தீட்டி அனுப்பிய ராமர் படத்தின் முன்காட்டி, மணி அடித்துக் கொண்டிருக்கிறார் மகாகனம், அது ஆரியரின் காலம் தீர்ந்துவிட்டது, என்பதை அறிவிக்கும் மணி ஓசை என்பதை அவரே அறியாமலிருக்கிறார்!

---

## சுகாதாரமா? அக்ரகாரமா?

நாட்டவரின் உடல் நலத்தைக்காக்க ஏற்பட்டது, சுகாதார இலாக்கா! எந்த இடத்திலும், ஒரு வகுப்பே பெரும்பகுதி அதிகாரம் பெற்றுவிட்டால், பிறவகுப்பினருக்குப் பிணியாகுமென்றுகருதியே, சமநீதிதேவையெனக் கூறுகிறது நீதிக்

கட்சி. 'இது பதவிப்பித்தம்—உத்யோக மோகம்"-என்று திருப்பிரம்மங்கள் உபதேசிக்கக்கேட்டதுண்டு. நீதியைக்கோருவோரை நிந்திக்கும் இந்த "நிர்மலசொரூபிகள்" அதிகாரபோதையைப் பருகவோ மறுப்பதில்லை, எவ்வளவு பருகினாலும், ஆசையோ அடங்குவதில்லை. இந்நிலையிலே சென்னைமாகாணச் சுகாதார இலாக்கா, இன்று, அதாவது வகுப்புநீதி வழங்கப்படவேண்டும்எனக் கேளாக்காதருக்கும் கேட்குமளவு கூக்குரல் கிளம்பியபிறகும், அக்ரகாரமயமாக இருக்கக் காண்கிறோம்! நீதிக்கட்சி, உத்யோக வேட்டையாடுகிறது என்று, உள்ளதை உணராது உரைத்திடும் அன்பர்கள், இன்று சுகாதார இலாக்காவிலே, உள்ள நிலையைக்கண்டு, கருத்திலே தெளிவுகொண்டு, தமிழர் பண்டுபோலவே ஆரியத்தின் அடிமைகளாகவேஇருக்கத்தான் வேண்டுமாஎன்பதை விண்டிடக் கேட்டுக்கொள்கிறோம். அதிகாரங்களிலே அமர்ந்திருப்பதால், கிடைக்கும் வருவாய் மட்டுமல்ல, இங்கு கவனிக்கப்படவேண்டியவிஷயம். அந்த அதிகாரங்களால் கிடைக்கும் செல்வாக்கு, அந்தச் செல்வாக்குக் குடும்ப உயர்வுக்கும், குலமுன்னேற்றத்துக்கும் பயன்படுவது என்பவைகளே மிகமுக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியவை. எந்த வகுப்பினர், உத்யோகமண்டலத்திலே அதிகமாக உள்ளனரோ, அந்தவகுப்பினருக்குச் சமுதாயத்திலே செல்வாக்கு வளருவதற்கு வழி பிறக்கிறது, தமது குலத்தைமுன்னேற்றுவிக்க மார்க்கம்கிடைக்கிறது. இதனால், ஒரு குலத்தினுக்கே உத்யோக மண்டலம் ஏகபோக உரிமையாகிவிடுமானால், நிரந்தரமாகஅந்தக்குலம்முன்னணியில் நிற்கவும், மற்றவகுப்பினர் தாழவும், ஏற்படுகிறது. இந்தச்சமூக அநீதி அழிக்கப்படவேண்டுமென்பதே தமிழர் தலைவரின் முழக்கம். முழக்கம் மும்முரமாகஇருந்துங்கூட, இன்றும் சுகாதார இலாக்காவா, அக்ரகாரமா என்று கேட்கக் கூடியவிதமாக அமைந்திருக்கிறது சென்னைமாகாணச் சுகாதார இலாக்கா. பார்ப்பனர்கள், சமுதாயத்திலே 100க்கு 3 பேர்! இதைக்காட்டி, நமது தேசியத் திலகர்கள் சில சமயம், நமது கிளர்ச்சியைக் கேலிசெய்வதுண்டு. "என்னசார்! பார்ப்பனர் 100-க்கு 3 பேர்தானே, அவர்களால் என்ன செய்யமுடியும். அதை ஒரு பிரமாதமானவிஷயம்போலப் பேசுகிறீர்களே" என்று நம்மைக்கேட்பதுண்டு. 100க்கு 3 பேராகஉள்ள அந்தக் கூட்டம், இந்தச் சுகாதார இலாக்காவிலேயும் 100-க்கு 3 உத்யோகம் அனுபவிக்கிறதா? இல்லை! கேளுங்கள் விஷயத்தை, பார்ப்பனரின் விகிதாச்சாரப்படி பார்த்தால், சுகாதார இலாக்காவிலே அவர்கள் 12 ஸ்தானங்களுக்கு மேல் பெறமுடியாது, ஆனால் அவர்கள் அடைந்திருக்கும் "ஸ்தானங்களோ" அதைவிட எத்தனையோபங்கு அதிகமானது.

சுகாதார இலாக்காவிலே பெரிய உத்யோகங்களின் எண்ணிக்கை 428. இதிலே, பார்ப்பனர்களுக்கு 274!! பாதிக்குமேல்! நூற்றுக்கு மூன்று பேரே உள்ள ஒரு குலத்துக்கு, நூற்றுக்கு ஐம்பதுக்குமேல்பதவி! இதுசரியா, முறையா என்று கேட்கிறோம். பொதுச்சுகாதார டைரக்டர், (உயர்தர அதிகாரி) ஒருபார்ப்பனர். துணை அதிகாரிகள் 7. இதிலே பார்ப்பனர் 4, பார்ப்பனரல்லாதார் 3. முதல் வகுப்புச் சுகாதார ஆபீசர்கள் 61. இதிலே பார்ப்பனர் 43!! இரண்டாம் வகுப்புச்சுகாதாரஆபீசர்கள் 67, இதிலே பார்ப்பனர் 34. மற்றொருவகை சுகாதார ஆபீசர்கள் 22. இதிலே 15 பேர் பார்ப்பனர். சுகாதார இன்ஸ்பெக்டர் 269. இதிலே 177 பேர் பார்ப்பனர். இவ்விதமிருக்கிறது, சுகாதார இலாக்கா. நீங்களே கூறுங்கள், இப்படிப்பட்ட நிலைமை இருக்கலாமா? இது சுகாதாரத்தை, சமுதாய சுகாதாரத்தைக் கெடுக்கக்கூடியதல்லவா, என்றுகேட்கிறோம்.

—

# கரூரில் சந்திரோதயம்.

புலியூர் தோழர் கந்தசாமி அவர்கள் தலைமையில் கரூர் அம்பிகாடாகீசில், 15—5—44 இரவு, "சந்திரோதயம்" விமரிசையாக நடைபெற்றது. ஈரோடு, திருச்சி, முதலிய இடங்களிலிருந்தும், கரூர், அதை அடுத்தகிராமங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்திருந்தனர். பெரியார், ஈ. வெ. இராமசாமி அவர்களும் வந்திருந்தார். நாடகத்தைப்பாராட்டித்தோழர் கந்தசாமி அவர்களும், பெரியாரும் பேசினர். பலபரிசுகள் வழங்கப்பட்டன. (விவரம் பிறகு) செலவுபோக 290 ரூபாய், திராவிடநாடு பத்திரிகைக்கு வழங்கப்பட்டது. கரூர், தமிழர் உணவு விடுதித் தோழர் சண்முகம், இனங்கனூர் சுப்பய்யா அவர்களுக்கும், அன்னாருடன் ஒத்துழைத்த தோழர்கட்கும்காஞ்சித்திராவிட நடிகர்கழகத்தார் சார்பாகத்தோழர்கள் D. V. நாராயணசாமியும், C. N. அண்ணாத்துரையும் வந்தனமளித்தனர். காலை 5-மணிக்கு நிகழ்ச்சி முடிந்தது.

—

## கரூரில்
# பொதுக்கூட்டம்.

கரூர் பகுத்தறிவுச்சங்க ஆதரவில் ஆற்றங்கரையில் தோழர் குமரவேல் அவர்கள் தலைமையில் 16—5—44மாலை ஒருபொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள், நெடுஞ்செழியன், D. V. நாராயணசாமி, அ. பொன்னம்பலனார், C.N. அண்ணாத்துரை ஆகியோரும், பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களும், திராவிடரின் நிலைமையை விளக்கிப்பேசினார்கள்.

# புராணிகருக்கு!

3ம் பக்கத் தொடர்ச்சி.

யல் வீற்றபடலம் ஆகியவற்றிலுள்ள கடவுள்தன்மை தமிழருக்குப் பொருந்துமா?

9. மக்கள்செய்தால் மடைமை,பாபம் என்னும் செயல்களைக் கடவுள் செய்யலாமா? மகாவிஷ்ணு கிருஷ்ணாவதாரத்தில், குளத்தில் நீராடிய கோபிகைமாரின் புடவைகளைக் களவாடி அவமானப்படுத்தினாரெனக் கூறுவது மட்டுமன்றித்,தமிழகத்தின் வைணவக் கோவில்களில்புன்னைமரத்தின்மீது கிருஷ்ணன் புல்லாங்குழலுடன் வீற்றிருக்கக் கீழேசுற்றிலும் பெண்கள் அம்மணமாய் நிற்கச்சித்திரம் தீட்டுவது ஆரியர் நாகரிகமா? அல்லது தமிழர் நாகரிகமா? இதைத் தாங்கள் ஆதரிக்கிறீர்களா?

10. திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் பிறந்த வரலாறென்ன? பட்டினத்தடிகள் ஓரிளம் மங்கைமீதுகாதல்கொள்ள,அவள் இணங்காத காரணத்தால் அவரது சுக்கிலம் வெளிப்பட்டதாகவும், அதை அவர் ஒரு எருக்கிலையில் விட்டுவைத்துச் சென்றதாகவும், இதையறிந்த முதியோள் அவ்விள மங்கையைக் கோபித்துக்கண்டித்து அவளை நீராடச்செய்து, இலையிலிருந்த சுக்கிலத்தைப் பயபக்தியுடன் அருந்தச் செய்ததாகவும், அதன்பயனாய் அவள் கருப்பமுற்றிருந்து அருணகிரியாரைப் பெற்றெடுத்ததாகவும், இந்தப் பகுத்தறிவு உலகத்தில், தங்கள் சொற்பொழிவிலே பல இடங்களில் கூறிவருகிறீர்களல்லவா? இம்மாதிரியான முறையில் கர்ப்பம் தரிக்குமா? ஆகாரப்பைக்கும் கர்ப்பப் பைக்கும் தொடர்பு உண்டா? இதைப்பகுத்தறிவாதிகள் ஒப்புக்கொள்ளுவார்களா?

11. சொற்பொழிவு தொடங்குமுன் தாங்கள் கணபதியைத் துதிக்கிறீர்கள் அல்லவா? அந்த விநாயகர் பிறந்த வரலாறென்ன? பன்னிரண்டு வகை விநாயகர்கள் புராணங்களில் கூறப்படுகிறார்களே, அது உண்மையா? விநாயகர் தமிழ்நாட்டுக்குவந்த வரலாறு தெரியுமா? பழங்காலத்தில் விநாயகர் வழிபாடு தமிழகத்தில் எது?


## அறிவிப்பு.

காஞ்சிபுரம் ஜரிகை வியாபாரம் பாபுபாய் குலாப்பாய் & கம்பெனி, காஞ்சிபுரம் கிளை ஆபிஸில் சிலகாலம் வேலையிலிருந்து பிறகு நீக்கப்பட்ட அகர்செந்து, குலாப்செந்து என்பவரிடம் எங்கள் கம்பெனியின்பெயரால், யாதொருவித வியாபாரசம்பந்தமோ, லேவாதேவியோசெய்தால் அது எங்கள் கம்பெனியைக்கட்டுப்படுத்தாது என்பதைப் பொதுமக்களுக்குத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
பாபுபாய் குலாப்பாய் & Co.
காஞ்சிபுரம் Branch.

# கலைகொள்ளை போகிறது. கேட்பாரைக் காணோம்.

(மயிலை நாதர்)

நாட்டின் முன்னேற்றத்தை முதன்மையாகக்கொண்ட பகுத்தறிவாளர்களாகிய சு. ம. காரர்கள் ஜனசமுகத்தில் சில சீர்திருத்தங்களைச்செய்ய முயன்றனர். பிற்போக்காளராகிய சிலர், இவர் செய்கையை விரும்பாமல் இவர்களுக்கு நாஸ்திகர் என்னும் பெயர் கொடுத்தார்கள். ஆகவே, சு. ம. காரர் புராணஇதிகாசங்களாகிய "ஆஸ்திக" நூல்களிலுள்ள ஆபாசங்களை வெளிப்படுத்தினார்கள். இதன்மேல் இவர்களுக்கு என்ன பெயர் கொடுத்துப் பொதுஜனவெறுப்பைஉண்டாக்கலாம் என்று யோசித்துப்பார்த்தனர் பிற்போக்காளர்கள். யோசித்துசு.ம. காரர்கள் கலையை அழிக்கிறார்கள், காவியத்தை அழிக்கிறார்கள், ஓவியத்தை அழிக்கிறார்கள் என்றுசொல்லி இப்போது ஓலமிட்டு வருகிறார்கள். சு. ம. காரர்மேல் குற்றங்கற்பிக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு இவ்வாறு கூறப்படுகிறதேதவிர உண்மையில் இவர்களுக்குக் கலைகளில் ஆசையோ, அதைப்பாதுகாக்கவேண்டும் என்கிற எண்ணமோ கிஞ்சித்தேனும் இருப்பதாகத்தெரியவில்லை. கலையின் பெயரைச்சொல்லிக்கொண்டு சு. ம. காரரை எதிர்க்கிற இவர்களுக்கு உண்மையிலேயே கலை அறிவும், கலையைப் போற்றவேண்டும் என்னும் எண்ணமும் இருந்தால், தமிழ்நாட்டுக் கலைச்செல்வங்கள் கொள்ளைபோய்க்கொண்டிருப்பதை இவர்கள் தடுப்பார்கள் அல்லவா? நேற்று,இன்று அல்ல; பல பல ஆண்டுகளாக நமதுநாட்டுக் கலைச்செல்வங்கள் மேல்நாடுகளுக்குக்கொள்ளை கொடுக்கப்படுகின்றன. முக்கியமாக நாம் இங்கு குறிப்பிடுவது சிற்பக்கலையை. செம்பு, பித்தளை, பஞ்சலோகம், கருங்கல் முதலியவற்றில் செய்யப்பட்ட சிற்ப உருவங்கள்மிக அழகுள்ளவை. தென்இந்தியச் சிற்பிகளால் அமைக்கப்பட்ட இந்த அழகிய கலைச்செல்வங்களை மேல்நாட்டார் பெரிதும்விரும்பிப் போற்றிவருகிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டில் சிலதரகர்களை ஏற்படுத்தி இத்தரகர் மூலமாக இக்கலைச்செல்வங்களைக் கொள்ளையடித்துக்கொண்டுபோகிறார்கள். சிறு பொருளுக்கு ஆசைப்பட்டுக்கொண்டு அழகிய புராதன சிற்பங்களை விற்றுவருகிறார்கள். இந்தக்கலைக் கொலை அல்லது கலைக்கொள்ளை பல ஆண்டுகளாகநடைபெற்றுவருகிறது. காவியம், ஓவியம், கலைகளைப் போற்றுவதாகக்கூறும் அறிவாளிகள் இதுவரையில் இக்கொள்ளையைத் தடுக்கவில்லை. இதைப்பற்றி ஒருவார்த்தையாவது கூறவில்லை. சு. ம. காரரைக் குற்றங்கூறுவதற்குமட்டும் உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள்.

மதுரையிலிருந்த அழகிய, கலைச்செல்வம்நிறைந்து விளங்கிய பெருமாள் கோயில்மண்டபம் இப்போதுஅமெரிக்கா தேசத்திற்குப்போய்விட்டது! மதுரை மதன கோபாலசுவாமி கோயிலில்இருந்த இந்த மண்டபத்தை 1912-ம் ஆண்டில் அமெரிக்கர் விலை கொடுத்துவாங்கிக் கொண்டுபோய் பிலடெல்பியா பொருட்காட்சிச்சாலையில் மண்டபம்போலவேகட்டிவைத்திருக்கிறார்கள்! இந்த மண்டபத் தூண்கள் சிற்பவேலைப்பாடுடையவை, அன்றியும் ஒவ்வொரு தூணிலும் ஆறு அடி உயரத்தில் பஞ்சபாண்டவர் உருவங்களும் ஏனைய உருவங்களும் தனித்தனியேமிக அழகாகச் சிற்பிகளால் செய்யப்பட்டுள்ளன. இந்த மண்டபத்தைப் பற்றியும் இதன் சிற்பக்கலையைப்பற்றியும் அமெரிக்கர் ஒருவர் ஒருபுத்தகம் எழுதியிருக்கிறார். )A Pillard Hall from Temple at Madura, India in the Philadelphia Museum of Art. By W., Norman Brown) கருங்கல்லால் செய்யப்பட்டு மிகப்பெரியதாகஉள்ள ஒருமண்டபம் (சிற்பக்கலைச் செல்வம்) பறிபோய்விட்டது! கலை, காவியம், ஓவியம் என்று சு. ம. காரரிடம் வந்துகூப்பாடுபோடுகிறவர்கள் இவ்வாறு சிற்பக்கலைகொள்ளை போனதைப்பற்றிப் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்கிறார்கள்! இவர்களின் கலைப்பாதுகாப்பு இவ்வாறு இருக்கிறது! பெரிய பதினாறு கால் மண்டபத்தையே அடியோடு பெயர்த்துக்கொண்டுபோய்விட்ட •மேல்நாட்டார்.செம்பு, பித்தளை,பஞ்சலோகம் முதலியவற்றால் செய்யப்பட்ட சிற்பஉருவங்களைச் சும்மாவிடுவார்களா? உண்மையிலேயே மேல்நாட்டார் கலைப்பிரியர்கள், கலையை உணர்ந்தவர்கள், கலையை ரசிக்கிறவர்கள், அவர்கள் நமதுநாட்டுச் சிற்பங்களைப் பெரும்பொருள் கொடுத்து வாங்கிக்கொண்டுபோகிறார்கள். எத்தனை ஆயிரம் சிற்பங்கள் மேல்நாடுகளுக்குப் போய்விட்டன என்று கணக்குச்சொல்ல முடியாது. கோயில் குருக்கள்மாரையும், பட்டர்மாரையும், தர்மகர்த்தர்களையும் கேட்டால்தெரியும். இவ்வாறு கலை கொள்ளைபோவதை ஆஸ்திகர்களும், மடாதிபதிகளும், ஜீயர்களும், சங்கராச்சாரிகளும், பண்டிதர்களும்,புராணிகரும், இந்துமத பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் வாயை மூடிக்கொண்டுபார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர,இதுவரை யாராவது ஏன் என்று கேட்டார்களா? இதையும் சு. ம. காரன்தானே இவர்களுக்கு எடுத்துக்காட்டிச்சொல்ல வேண்டியிருக்கிறது! இவர்களின் கலைப் பாதுகாப்பு எதற்குப்பயன்படுகிறது என்றால்சு. ம. காரர்களைஎதிர்ப்பதற்குமட்டும் பயன்படுகிறதேதவிர, உண்மையில் கலைப்பாதுகாப்புக்குணம் இவர்களிடம் கிஞ்சித்தும்கிடையாது.

சு. ம. காரருக்குக் கலைகளின்மேல் வெறுப்புஇல்லை. உண்மையிலேயே சு. ம. காரர்கள் கலைரசிகர்கள், கலைச்செல்வர்கள் கலையைப் போற்றுகிறவர்கள், கலையைவளர்க்கிறவர்கள். ஆனால், கலையின் பெயரினால் ஜனங்களை அடிமைப்படுத்துவதையும்,முட்டாள்களாக்குவதையும் வெறுக்கிறார்கள். கலைவேறு, சமயம் வேறு என்றும், இரண்டும தனித்தனியே இருக்கவேண்டிய பொருள்கள் என்றும் இரண்டையும் ஒன்றாக இணைத்து மக்களின் அறிவை அடிமைப்படுத்திச்,சுயநலக் கூட்டம் தங்கள் பிழைப்புக்கு வழிசெய்துகொள்ளக்கூடாது என்றும் சு. ம. காரர்கூறுகிறார்கள். ஆகவே சு. ம. காரர் கலையை அழிக்கிறார்கள் என்று சில சுயநலக்காரர்கள் கூப்பாடுபோடுவது, அருவருக்கத்தக்க பொய் என்று கூறுகிறோம். பொது மக்கள் இப்பொய்மொழியை நம்பிஏமாறக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறோம்.

---

## கோபி தாலுக்கா திராவிட வாலிபர் மாநாடு.

மேற்படி மாநாடு, கோபிச்செட்டிபாளையத்தில் 27—5—44ல் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். பெரியார், அண்ணாத்துரை ஆகியோரும்மற்றும் பலரும்கலந்துகொள்வர்.

---

## காசினோ வீழ்ந்தது.

இத்தாலியிலே, பலமான ஜெர்மன் அரணாக இருந்துவந்த காசினோ என்ற நகரம், நேசநாட்டுப் படையிடம் சிக்கிவிட்டது. ஜெர்மன்படைகள் பின்வாங்கின.

---

## கோஹிமா.

கொஹிமாகளத்திலே நேசநாட்டுப் படைகளின் கைமேலோங்கிவிட்டது. பல இடங்களிலிருந்து ஜப்பானியர்விரட்டப்பட்டனர். திட்டியதிட்டம் நிறைவேறாததால் ஜப்பானியர் திணறுகின்றனர்.

---


## பெரியார் பெருந்தொண்டு.

**கவர்ச்சிமிக்க கவிதை**

விலை 8 அணா

ஆசிரியர் புதுவை S. சிவப்பிரகாசம்.

கிடைக்குமிடம்:—

"பூங்கொடி" பதிப்பகம்,

43-சேன்த்தெரேஜ் மடத்து வீதி,

புதுச்சேரி.

# தமிழர்களே! இனியேனும் விழித்தெழுவீர்களா?

கோட்டாறு வே. நடேசன்.

"ஆரியர்வேறு. தமிழர்வேறு. அவர்களது மொழி, கலை, பழக்கவழக்கங்கள் வேறு. நமதுமொழி, கலை, பழக்க வழக்கங்கள்வேறு. ஆகவே ஆரியனும் தமிழனும் ஒருநாளும் ஒன்றுபட்டு வாழமுடியாது. தமிழர்கள் முன்னாளில் பாரோர் போற்றும் பண்புடையவர்களாய், நாகரிகமுடையவர்களாய் இருந்தார்கள். பின்னால் ஆரியத்தின் நயவஞ்சகத்தன்மையால் எல்லையற்ற தொல்லைகளுக்காளாகி இன்றுள்ள இவ்விழிநிலை யடைந்தனர். எனவே தமிழ்நாடு முன்னுள்ள முன்னேற்றநிலையை அடையவேண்டுமானால், தமிழர்கள் தன்மானத்துடன் வாழவேண்டுமானால் இடையேவந்து புகுந்த ஆரியத்தின் ஆணவம் அடக்கப்படல் வேண்டும். தமிழகம் தன்னுணர்வுபெற்றுத்தமிழ் நாடு தனிநாடாகி, மீண்டும் தமிழ்நாட்டில் தமிழரசு ஏற்படவேண்டும். இதுதமிழர் தலைவர். பெரியார். ஈ. வெ. ரா. அவர்கள் கடந்த இருபதுஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் முழங்கிவரும் முழக்கமாகும். இதனைக்கேட்ட ஆரியரும், ஆரியமாயையால் மறைக்கப்பட்ட தமிழர்களில் பலரும் அன்று, ஏன் இன்றும், நாயக்கர்வகுப்புவாதம் பேசுகிறார்என்றுநாக்கில்நரம்பின்றிப் பேசியும் எழுதியும் தூற்றிவந்தனர், வருகின்றனர். இத்தகையோருக்கு விழிப்புண்டுபண்ண இத்தமிழகத்தில் இடையிடையே சிற்சில இணையிலாச்சம்பவங்கள் தோன்றி மறைகின்றன. அவற்றுள்முதன்மையானது கட்டாய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி!

தமிழ் நாட்டில், தாய்மொழியாகிய தமிழ்மொழியே கட்டாயபாடமாக இல்லாத தமிழ் நாட்டில், ஆச்சாரியார் ஆட்சியையேற்றதும் அவருடைய தாய்மொழியாம் வடமொழியின் வளர்ச்சியைக்கருதி இந்திமொழியைக் கட்டாயபாடமாகக் கொண்டு வந்தார். தன்மானமுள்ள தமிழர்கள் தலைதூக்கினர். தமிழ்மொழிக்கு வரும்ஆபத்தையுணர்ந்தனர். தமிழர்களில் பெரும்பாலரும் எதிர்த்தனர். ஆனால் ஆரியர்களில் அநேகரும் ஆதரித்தனர். ஆரியப் பத்திரிகைகள் அத்தனையும் கட்டாய இந்தி மொழியை ஆதரித்து எழுதின. தமிழர்களின் பலத்தஎதிர்ப்பு இருந்தும் ஆச்சாரியார் இந்தியைக்கட்டாய பாடமாக்கியேதீருவேன் என்று ஆணவம்பேசினார். இந்தியை எதிர்த்த ஆயிரத்திற்கதிகப்பட்டதமிழர்களைச்சிறையில்தள்ளினார். தமிழர் தலைவர். அறுபதாட்டை நிரம்பிய பெரியார். ஈ. வெ. ரா. வும் ஆச்சாரியாரால் சிறையில் தள்ளப்பட்டார். அதுமட்டுமல்ல! உயிரினுமினிய தம் தாய்மொழிக்காகப்போராடிய நடராசன்தாலமுத்து என்ற இளைஞர் இருவரின். உயிரைப்பலிகொண்டார்! அப்படியும் கட்டாயஇந்தியை எடுத்தாரில்லை. மாறாகத் தாய்மொழிக்காக உயிரைவிட்ட அவ்விரு இளைஞர்களையும் கல்வியறிவில்லாத கயவர்கள் எனஇழித்துரைத்தார். தமிழர்கள் வீறு கொண்டெழுந்தனர்! நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடத்தினர்! இறுதியில் வெற்றியும்கண்டனர்.

இவ்வாறு ஆச்சாரியார் இந்திமொழியைக் கட்டாயபாடமாகக் கொண்டுவரவும் அதை அவரினத்தவராகிய ஆரியரும் அவர்களது பத்திரிகைகளும் சொல்லிவைத்தாற்போல் கட்டுப்பாடாக ஒன்றுசேர்ந்து ஆதரித்ததையும் கண்டதமிழர்களில் விழித்தெழுந்தவர் சிலர். ஆனால் மீண்டும்தூக்கத்தில் ஆழ்ந்திருந்தவர்பலர்.

காரணம் தமிழர்களுக்குப்போதிய பிரசாரமின்மையே. தமிழ்நாட்டில் இன்று தமிழனுக்கென்று ஓர் தினசரியில்லை. இன்று தமிழ்த்தினசரிகளில் முக்கியத்துவம் வாய்ந்தபத்திரிகைகள்நான்கு. அவற்றில் தினமணி, சுதேசமித்திரன், பாரததேவி, என்றமுதல் மூன்று பத்திரிக்கைகள் பார்ப்பனர்களால் அவர்கள்நன்மைக்கென நடத்தப்படுவது. ஆரியர்களின் முன்னேற்றமே அவைகளின்குறிக்கோள். பணம்பறிப்பது மட்டும் தமிழர்களிடமிருந்து! என்பறிக்க மாட்டார்கள். மானங்கெட்ட தமிழன் அவைகளை ஆதரித்துப்போற்றும் வரையும் பறிக்கத்தான் செய்வார்கள். தமிழனுக்கு எள்ளளவேனும் தன்மானம் இருப்பின், ஆரம்பித்த நாள் தொடங்கி இன்றுவரையும் தமிழனுக்கு எதிராக எழுதிவரும் ஆனந்த விகடன் பத்திரிகை இன்றும்தமிழர் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருக்குமா?

இனிநாலாவதாகிய 'தந்தி' பத்திரிகையோதமிழர் ஒருவரால் நடத்தப்பட்டும் தமிழ் மக்களுக்குப் பயன்படாமல் ஆரியர்களின் அடிவருடியாகவே இருந்துவருகின்றது. இதை, இன்றும் இப்பத்திரிகை ஆரியரும் தமிழரும் ஒன்றே. அவர்களையும் நம்மையும் பிரித்துக்கூறுவதுபொருந்தாது என்று எழுதிவருவதை அறிந்தோர் நன்கு அறிவர்.

இவ்வாறு ஆரிய ஆட்சியால் அடக்கி ஒடுக்கப்பட்டு அவர்களின் அடிமைகளாய், தீண்டப்படாதவர்களாய், வேசி மக்களாய்க் கருதப்பட்டுநெடுநாள் தூக்கத்தில் ஆழ்ந்துகிடக்கும் தமிழர்களைத்தட்டியெழுப்பத், தமிழ் நாட்டில் மற்றோர் கிளர்ச்சி தோன்றியிருக்கின்றது. அதுவே தமிழிசைக் கிளர்ச்சி! அன்றொருநாள், ராஜா. சர். அண்ணாமலையார் தமிழ் நாட்டில் தமிழர்கள் மத்தியில் அவர்களுக்கு விளங்காத வேற்றுமொழிப்பாடல்களைப் பாடப்படுவதைப் பார்த்து மனம் பொறாது, தமிழ்நாட்டில் தமிழர்கள் ரசிக்கும், தமிழ்ப்பாடல்களே மிகுதியும்பாடப்படுதல்வேண்டும் என்றுகூறி ஓர் இயக்கத்தைத்தோற்றுவித்தார். தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட தமிழர்கள் வரவேற்றனர். வடமொழியைத் தாய்மொழியாகக்கொண்ட வடவர்கள், பார்ப்பனர்கள் எதிர்த்தனர். இசைக்கு மொழி பிரதானமில்லை. தமிழ்மொழி இசைக்குஏற்றதல்ல. தமிழிசைக் கிளர்ச்சியில் ஏதோ அரசியல் சூழ்ச்சி கலந்திருக்கின்றது. தமிழிசையால் கர்நாடக சங்கீதம் ஒழிந்துபோகும் என்றெல்லாம் சாக்குச் சொல்லிப் பார்த்தனர். தமிழறிஞர்கள் தக்க பதிலிறுத்து வந்தார்கள். என்றாலும் அவர்கள் தம் ஆதாரமற்ற கூற்றைக்கைவிட்டனரில்லை. ஏனெனில் அவர்களுக்குத்தெரியும் தமிழிசையால் தமது மொழிக்கும் தமதுஇனத்துக்கும் கேடுண்டாகுமென்று. ஆகவே விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலராய் இருந்துகொண்டும் கட்டுப்பாடாக ஓர் பெரிய சமுகத்தையே எதிர்க்கத்துணிந்து விட்டனர். பார்ப்பனப் பாகவதர்கள் தமிழ்ப் பாடல்களைப்பாட மறுத்தனர். தமிழர்களுக்கு ஒரு சிறிது விழிப்பேற்பட்டது. தஙகள் நிலைமையைஉணர்ந்தனர். கடந்த திங்களில் சென்னைப்பட்டினத்தில் பல்லாயிரக்கணக்காக ஒன்றுகூடினர். தமிழனுக்குத் தமிழ்ப்பாடல்களே மிகுதியும்வேண்டும். கச்சேரியின் ஆரம்பத்திலும் முடிவிலும் தமிழ்ப்பாடல்களே பாடப்படுதல் வேண்டும் என்றுதீர்மானித்தனர். தமிழ்நாட்டில் தமிழிசையை எதிர்க்கும் ஒருவனுக்கு இருக்கஇடங்கிடையாது என்று வீரமுழக்கமிட்டார், ராஜா. சர். ஆனால் மறுநாள் நடந்ததென்ன? ஆரியர் அடங்கினரா? இல்லை. கண்டனக்கூட்டம் ஒன்று நடத்தினர். ஆரியப் பத்திரிகைகளாகிய, ஆனந்தவிகடன், சுதேசமித்திரன், பாரததேவி, ஹிந்து முதலிய எல்லாப் பத்திரிகைகளும்தமிழிசைக் கிளர்ச்சியைக் கண்டித்துஎழுதின. என்னே அவர்களின் ஆணவம்! தமிழ்நாட்டில் வந்து குடியேறிக்கொண்டு, அதுவும் ஓர் சிறியகூட்டமாய் இருந்துகொண்டு தமிழர்க்கு எதிராய் இருக்கவேண்டுமானால், தமிழர்களே! நீங்களே யோசித்துப்பாருங்கள், ஆரியம் இத்தமிழ் நாட்டில் எவ்வளவுதூரம் வேரூன்றி இருக்கின்றதென்பதையும். தமிழன் அதற்கு எவ்வளவு தூரம் அடிமைப்பட்டிருக்கின்றான் என்பதையும் தமிழ்நாட்டில் நம்மை ஆதரிக்கவும், நமது பத்திரிகைகளை வாங்கிப் படித்து மகிழவும் இன்றும் ஓர் ஏமாளிக் கூட்டம் இருக்கத்தான்செய்கின்றது.

(8ம்பக்கம் பார்க்க)

## குடந்தைதிராவிட மாணவர் மாநாடு

2ம் பக்கத் தொடர்ச்சி.

வேண்டும். நமக்கு இழிவும், பழியும் தேடித்தந்து நம்மை அடக்கிஆள விரும்பும் கோழைகளையும், வஞ்சகர்களையம், அயோக்கியர்களையும் அறிந்து நம்மிடத்தினின்றும் அகற்றவேண்டும். உள்ளபடியே ஒன்றையும் உணர்ந்துபார்க்கத் தெரியாதவன் முட்டாள்; உணர்ந்துபார்க்கத் தெரிந்தும் உணர மனமில்லாமலிருப்பவன் சோற்றாலடித்தபிண்டம்; உணர்ந்துபார்க்கத்தெரிந்தும் உணர்ந்ததை வெளியிட அஞ்சுபவன் கோழை; உணர்ந்து பார்க்கத்தெரிந்தும் உணர்ந்ததை வெளியிட்டால் மற்றவர்க்குஉயர்வு வரும் என்றுகருதி அதனைமறைத்து வைப்பவன் வஞ்சகன்; உணர்ந்து பார்க்கத்தெரிந்தும் உணர்ந்ததை அப்படியே வெளியிடக்கூடாது என்றுகருதி இழிவும், பழியும் கற்பித்து அதனைமாற்றிக் கூறுபவன் அயோக்கியன்; உணரத் தெரிந்தும் உணர்ந்ததைஎத்தனை இடுக்கண்கள் அடுக்கிவரினும் உள்ளபடியே வெளியிடுபவன் அறிவாளி, அத்தகைய அறிவாளிகளாக நீங்கள் வாழவேண்டும். அதைத்தான் நாடு விரும்புகின்றது. கருத்தில்கொண்டதைச் செயலில்செய்ய முனையுங்கள். பின் திராவிட நாடு திராவிடர்க்காக்கப்படும் என்பது ஒரு தலை. பெரும் எதிர்ப்புகளுக்கிடையே அஞ்சா நெஞ்சத்துடன் முன்னின்று, மாநாட்டைச் சிறப்புற நடத்துவதிலே ஊக்கங்கொண்டுஉழைத்து, நம்மை அன்புடன் போற்றும் குடந்தைத்திராவிட மாணவத் தோழர்களுக்கு நமது நன்றியறிதல் என்றென்றும் உரியதாகுக.

---

குடந்தைத் திராவிடமாணவர் மாநாட்டில் தோழர் A. P. ஜனார்த்தனம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

தோழர்களே,

தோழர் C. N. அண்ணாத்துரையவர்கள் நேற்றிரவுத்தந்த அரியகருத்துக்களை விட நான்ஒன்றும் அதிகமாகத்தரமுடியாது. எதிர்காலம் எவ்வாறிருக்கவேண்டும்என்பது குறித்தபேச்சு மேல்நாட்டு பேவரிட்ஜ் முதல் கீழ்நாட்டுச் சாஸ்த்திரியார்வரை பேசிக்கொண்டிருப்பதைக் காண்கிறோம். இந்நாட்டு முதலாளிகள் திட்டம் இப்போது அடிபடுகின்றது. இனிவரும் உலகத்தைக் குறித்துப் பெரியார், H. G. வேல்ஸ் போன்றோரும் தம் எண்ணங்களை வெளியிட்டுள்ளனர்.

பல நூற்றாண்டுகளாக ஆரியர் சூழ்ச்சியில் அகப்பட்டுத் தற்போதுசிறிது விழிப்படைந்திருக்கும் திராவிடரின் எதிர்காலத்தைக்குறித்துச் சிறிதுபேசுகிறேன். எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பதைவிட எப்படி இருக்கவேண்டும் என்ற ஆராய்ச்சியே தற்போது மிகத்தேவை.

போர் முடிந்தவுடன் நாம் நம் உரிமைகளுக்குக் கிளர்ச்சியை நடத்தவேண்டும். அத்தகைய கிளர்ச்சிக்கு வாலிபர்கள் தயாராகவேண்டும். எப்படித்தயாராவது என்பதுகுறித்துச் சில சொல்லுகிறேன்.

நீங்கள் பல செய்திகளைத்தெரிந்துகொள்ளவேண்டும். ஏராளமாகப் படிப்பதோடல்லாமல் வாழ்க்கையை, சுற்றிலுள்ள உலகைக்காணவேண்டும்,

மனித முற்போக்கிற்கென உழைத்துப் பெருந்தொல்லைகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்ற பெரியார்களின்உறுதியை, உணர்ச்சியைத் தாங்களும் பெறவேண்டும். கலிலியோ, டார்வின் போன்றோரின் வாழ்க்கைகள் அத்துறையில் நல்லபடிப்பினைகளைத்தருவன. கட்டைவண்டிமுதல் ஏரோப்பிளேன்வரை விஞ்ஞானத்துறையில் ஏற்பட்ட மாறுதல்களைத்தெரிந்துகொள்ளுங்கள்.

அமெரிக்கா, எகிப்து, அயர்லாந்து போன்ற நாடுகள் எவ்வாறு தத்தமது உரிமைப்போர்களை நடத்தின என்பதைக் கவனியுங்கள். கமால், சன்-யாட்-சென்போன்றோர் எவ்வாறு பழமையை விரட்டினர் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். அலெக்சாண்டர், ஆனிபால், நெப்போலியன், இட்லர்போன்றோரின் எழுச்சியை, வீழ்ச்சியை உற்றுநோக்குங்கள்.

ரூசோ, வால்டையர், மார்க்கஸ், எஞ்சல்ஸ், லெனின்போன்றோரின் கருத்துக்களைப் பாருங்கள். இன்றைய பெரும்போரின் போக்கிலிருந்து புலப்படும், வஞ்சகம், இரத்தவெறி,போன்ற பல விளைவுகளை வெறுத்துத்தள்ளுங்கள்.

கடைசியாக யூதர்பண்பினையும், ஆரியர் தன்மையையும் ஒத்திட்டுப்பாருங்கள். ஆரியம் எவ்வாறு காரியத்தில் கண்ணாயிருந்து பல பேரரசுகளைக்கவிழ்த்ததென்பதைத் தெரிந்துக்கொள்ளுங்கள்.. கலை என்னும் கொலைக்கருவி எவ்வளவு தந்திரமாக நம்மவரைத் தாழ்த்திற்று என்பதைக் கூர்ந்துநோக்குங்கள்.

இவையனைத்தையும் இன்றைய நம் நிலைக்கு உதவத்தக்கவகையில் மாற்றி உணர்ச்சியைப் பெறுங்கள்.

இவ்வாறு பல செய்திகளைத்தெரிந்துகொண்டு, நம் இயக்கச்செய்திகளைப் பல இடங்களில் பரப்புங்கள். தாலமுத்து, நடராசன்போன்றோரின் சிறப்புகளைத் தெரிந்துகொண்டால், உங்கள் உள்ளங்கள் துள்ளியெழும்—கிளர்ச்சிக்குப் புரட்சிப்புயலை அடக்கிக்கொண்டு, கிளர்ச்சிக் கனலைத் தளர்த்திக்கொண்டு, அமைதி யானவழிகளில், எவர்க்கும் அஞ்சாமல், உண்மையை, ஒழுக்கத்தை உறுதுணையாகக்கொண்டு நாடுபெற, இனம் முன்னேற, உழைப்போம் வாரீர்! எதிர்காலம் நம்முடையது.

---

## தமிழர்களே விழித்தெழுவீர்களா?

7-ம் பக்கத்தொடர்ச்சி.

என்ற துணிவன்றோ அவர்களை இவ்வாறு எழுதத் தூண்டுகின்றது. அன்றே, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிநடந்த அன்றே, தமிழர் ஒவ்வொருவரும், 'தமிழர் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடும் எந்தப்பத்திரிகையையும்கைகொண்டும் தொடேன் என்று விரதம்பூண்டிருந்தால் இன்றும் இவ்வாறு தமிழிசையைக் கண்டித்து எழுதியிருக்காதன்றோ!

எனவே தமிழர்களே! இனியேனும் விழித்தெழுவீர்களா! தமிழிசையை எதிர்க்கும் பத்திரிகைகளுக்கு இங்கு வேலையில்லாது செய்வீர்களா! ஆரியர் வேறு. தமிழர் வேறு. அவர்களும் நாமும் ஒருநாளும் ஒன்றுபட்டிருக்கமுடியாது என்று பெரியார்கூறிய பேருண்மையை உள்ளங்கொள்வீர்களா!

---

## களம் கண்டார்.

வைசிராய் நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர் சர். சுல்த்தான் அகமது, அசாம் போர்முனைப் பகுதிகளில் நான்கு நாட்கள் தங்கி, களத்தின் நிலைமையைத் தெரிந்துவந்திருக்கிறார். இந்தப் 'போராட்டம்', இந்தியாமீது படைஎடுப்புஎன்று கருதக்கூடியதல்லவென்றும், ஜப்பானிய முயற்சி முறியடிக்கப்படுமென்றும் சர் அகமது உறுதிகூறினார்.

---

## இராஜகிரி.

19–3–44 ஞாயிற்றுக்கிழமை இராஜகிரி வாசகசாலை & நூல்நிலயக்கழகச் சார்பில்மகாநாடு காலை12மணிக்குச் சென்னை அரசாங்க முஸ்லீம் கல்லூரி தலைமை பேராசிரியர் ஆலிஜனாப் மௌலானா மௌலவி அப்ஜலுல், உலமா Dr. அப்துல்ஹக்சாஹிப் அவர்கள் தலைமையில் நடந்தது.

---

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.